# புலிக்குத்திப்பட்டான் கல் – கள ஆய்வு முன்வைத்து

# The Tiger – Stabbed Stone – Based on field Research

2

**மணிமேகலை. ச**

தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை, தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),

திருப்பத்தூர் – 635 601, திருப்பத்தூர் மாவட்டம்.

**Manimegalai. S**

Department of Tamil Post Graduate and Studies,

Sacred Heart College (Autonomous), Tirupattur – 635 601, Tirupattur District,

**ORCID: https://orcid.org/0009-0007-4543-0732**

**DOI:** 10.5281/zenodo.18737767

**Abstract**

*Since the dawn of humanity, when humans lived in forests, they have worshipped nature and lived in fear of death. They developed the practice of creating funerary monuments for the deceased. One such type of monument is the dolmen. These dolmens are approximately three thousand years old, and they feature drawings and paintings. Subsequently, during the megalithic period, hero stones or memorial stones for the deceased came into existence. Tamil warriors protected their villages from enemies, and when enemies raided cattle, the warrior(s) would fight to recover the cattle and die a heroic death in battle. A warrior would also die a heroic death after protecting the village from invading enemies. A warrior would even sacrifice his life for the well-being of the king. In honor of these warriors who sacrificed their lives, the general public, the king, and their relatives erected hero stones. These warriors protected the people not only from enemies but also from wild animals, particularly tigers, safeguarding cattle and people, and dying a heroic death in the process. Hero stones were erected to commemorate such heroes.*

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதன் காடுகளில் வாழ்ந்த ஆதி காலம் தொட்டே இயற்கையை வணங்கியும், மரணத்தைக் கண்டு பயந்து வாழ்ந்துள்ளான். இறந்தவர்களுக்காக ஈமச்சின்னங்களை ஏற்படுத்த பழகிக்கொண்டான. அவற்றில் ஒன்று கற்திட்டைகள் இந்த கற்திட்டைகள் கிட்டதட்ட மூவாயிரம் ஆண்டுகள் பழமையானதாகும், கற்திட்டைகளில் ஓவியங்கள் வரைதலும், தீட்டுதலும் இருந்துள்ளது. அதன்பிறகு பெருங்கற்கால காலத்தில் இறந்தவர்களுக்கான வீரக்கல் (அ) நினைவுச் சின்னங்கள் தோற்றம் பெற்றன. தமிழ் மறவர்கள் தங்களுடைய ஊரைப் பகைவர்களிடமிருந்து காப்பற்றவும் பகைவர்கள் ஆநிரை கவர்ந்த நிலையில் ஆநிரை கவர்ந்த பகைவர்களிடம் இருந்து மறவன் அல்லது மறவர்கள் ஆநிரைகளை மீட்டுப் போரில் வீர மரணம் அடைந்தனர். படை எடுத்துவரும் பகைவரிடம் இருந்து ஊரைக் காப்பாற்றிய பின்னர் வீர மரணம் எய்துகின்றான். அரசன் நலம் பெற மறவன் ஒருவன் உயிர் தியாகம் செய்கின்றான். இவ்வாறு உயிர் துறந்த வீரர்களுக்கு அவர்களைப் போற்றும் வகையில்

பொது மக்களும் அரசனும் உறவினரும் நடுகல் எடுக்கின்றனர். பகைவர்களிடம் மட்டுமல்லாது விலங்குகளிடமிருந்தும் மக்களைக் காத்துள்ளான். குறிப்பாக புலிகளிடமிருந்து ஆநிரைகளையும், மக்களையும் பாதுகாத்து வீரமரணம் எய்தியுள்ளான். அவ்வீரனைப் போற்றும் வகையில் நடுகற்கள் எழுப்பப்பட்டுள்ளன.

**Key Words :** *Tiger-slaying stone, memorial stone, hero stone, Yelagiri Hills, Marimanapalli, புலிக்குத்திப்பட்டான் கல், நடுகல், வீரக்கல், ஏலகிரிமலை, மரிமானப்பள்ளி*

## முன்னுரை

நடுகல் அனைவராலும் வணங்கப்படுகிறது. காலங்காலமாக வழிபாட்டில் சில நடுகற்கள் இருந்து வருகின்றன. ஆகவே நடுகல் வழிபாடு தொன்று தொட்டு இந்த மண்ணில் நிலைத்து இருந்து வருகிறது. கணவன் உயிர்நீத்தால் அவனுடைய மனைவி அவனின்றி வாழக் கூடாது என்ற எண்ணத்தில் கணவனுடன் தீயில் பாய்ந்து தானும் உயிரை மாய்த்துக் கொள்வதற்கு உடன்கட்டை ஏறுதல் அல்லது தீய்ப்பாய்தல் என்று பெயர். இந்த இரண்டு வகைக் கற்களும் தமிழ்நாட்டில் ஆங்காங்குக் கிடைக்கின்றன. வீரக்கல் நடுகல் வழக்காக பின்னாளில் மாறியது. பல்லவர், பாணர், கங்கர் காலத்தில் ஆநிரை மிட்டலுக்கான நடுகல் வடிவங்கள் பெரும்பாலும் கிடைக்கப்பெற்றுள்ளன. யானை, நாய், கோழி இவைகளுக்கு நடுகல் எடுக்கும் வழக்கம் சங்க கால மக்களிடம் காணப்பட்டுள்ளது. அந்த வகையில் மலை மக்களிடம் அதிகளவில் காணப்பட்டது புலிக்குத்திப்பட்டான் கல்லாகும். ஏலகிரிமலை, கிருட்டிணகிரி மாவட்ட மரிமானப்பள்ளி மலை அடிவாரத்தில் இத்தகைய புலிக்குத்திப்பட்டான் கல் காணப்படுகின்றது.

## ஏலகிரிமலை அடிவாரத்தில் புலிக்குத்திப்பட்டான் கல்

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டைக்கு அருகே ஏலகிரிமலை அடிவாரத்தில் இயற்கை அமைப்போடு கூடிய ஏலகிரி கிராமம் உள்ளது. இவ்வூரைச் சுற்றி மதில் போல் ஏலகிரிமலை சூழ்ந்துள்ளது இந்த ஊரில் ஜெயச்சந்திரன் என்பவருக்குச் சொந்தமான விளைநிலத்தில் சோழர்காலத்துப் புலிக்குத்திப்பட்டான் கல் ஒன்று காணப்படுகின்றது.

புலிக்குத்திப்பட்டான் என்பது புலியோடு போரிட்டுத் தம் மக்களையும், கால்நடைகளையும் பாதுகாத்து இறந்து போன வீரனுக்கு எடுக்கப்படும் நடுகல்லாகும். சில நூற்றாண்டுகளுக்கு முன்பு ஏலகிரிமலையில் ஏராளமான புலிகள் வாழ்ந்திருக்க வேண்டும். ஏலகிரிமலையின் அடிவாரத்தில் ஏலகிரிகிராமம் இருப்பதால், அடிக்கடி புலிகள் ஊருக்குள் புகுந்து மக்களையும், ஆடு, மாடுகளையும் தாக்கியிருக்க வேண்டும்.

அந்த ஆட்கொல்லிப் புலியைப் கொல்ல முயற்சித்து இருப்பான் வீரன். அவ்வீரனுக்கு இந்நடுகல் எடுக்கப்பட்டுள்ளது. 3.5 அடி உயரமும் 3 அடி அகலமும் கொண்டதாக இந்நடுகல் உள்ளது.



**ஏலகிரிகிராமத்தில் புலிக்குத்திப்பட்டான் கல்**

புலியானது வீரனின் இடது காலை தன்னுடைய முன்னங்கால்களால் பிடித்துள்ளது. மேலும் தன் கொடிய வாயால் வீரனின் தொடையைக் கடிப்பது போல் காட்சிப்படுப்படுத்தப் பட்டுள்ளது. இரண்டு பின்னங்கால்கள் அழகிய வால் எனப் புலி அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது. வீரன் நீண்டக் கொண்டையுடன் இடது கையிலுள்ள குறுவாளால் புலியின் முதுகில் குத்தியும், வலது கையிலுள்ள வாளால் புலியைக் குத்த ஓங்கியவாறும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இப்போரில் புலியும் வீரனும் இறந்து போயினர் என்பதை இப்புடைப்புச் சிற்பம் எடுத்துரைக்கிறது.

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புலிக்குத்திப்பட்டான் கல் (மரிமானப்பள்ளி)**



தமிழ்நாடு மாநிலத்தில் கிருட்டிணகிரி மாவட்டத்தில் பருகூர் தொகுதியில் உள்ள சிறிய மலைக்கிராமம் / குக்கிராமமாகும். இந்த மரிமானப்பள்ளி ஊராகும். இது மல்லப்பாடி ஊராட்சிக்கு உட்பட்டது. கிருட்டிணகிரியில் இருந்து கிழக்கி நோக்கி 19 கி.மீ தொலைவிலும், பர்கூரில் இருந்து 5 கி.மீ தொலைவிலும் உள்ளது.

இப்பகுதியில் சிலையப்பசுவாமி (அ) செல்லப்பசாமி என்ற பெயரில் வணங்கப்பட்டுவருகின்றது பெரும்பாலும் மலைப்பகுதிகளில் புலிகளின் தாக்குதல் அதிகளவில் இருந்திருக்கும் அதனடிப்படையில், மரிமானப்பள்ளியின் மலையடிவாரத்தில் இந்நடுகல் கிடைக்கப் பெற்றுள்ளது. 3.5 அடி உயரமும், 5 அடி அகலமும் கொண்ட கல்லில் புடைப்புச் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது.



**மரிமானப்பள்ளியில் (கிருட்டிணகிரி மாவட்டம்) புலிக்குத்திப்பட்டான் கல்**

வீரனின் வலதுபுறத்தில் புலி ஒன்று தாக்குவதற்கு பாய்ந்துள்ளது. இக்கல்லில் இருக்கும் வீரனானவன் தலையில் கொண்டையிட்டும் இடுப்பில் கச்சை, கழுத்தில் ஆபரணங்களுடனும் காட்சித்தருகிறார், இரண்டு கால்களிலும் வீரக்கழல்கள் அணிந்துள்ளார். கையில் ஈட்டியைக் கொண்டு புலியை வயிற்றுப்பகுதியில் தாக்கியுள்ளார்.

புலியின் உருவமும் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. பற்களை வெளியே காட்டியவாறு மிகுந்த கோபத்தோடு வீரணைத் தாக்குவதற்கு புலியானது பாய்ந்துள்ளதை இந்நடுகல் எடுத்துரைக்கிறது.

மலையடிவாரத்தில் இருந்த மக்களுக்கு தொந்தரவு தரும் வகையில் இருந்த புலியை வீரன் கொன்றிருக்கிறார். அவ்வீரனின் வீரத்தைப் பறைச் சாற்றும் வகையில் இந்நடுகல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பகுதியில் உள்ள மக்கள் இந்நடுகல்லிற்கு பொங்கலிட்ட, பூசைகள் நடத்துகின்றனர். மேலும் மாடுகளை பலியிட்டும் நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர்.

**மாடு, ஆடு பலியிடுதல்**

நேர்த்திக்கடனாக பலியிட்ட மாடுகளின் தலைப்பகுதி, உடல்பகுதிகளை இந்நடுகல்லிற்கு அருகே உள்ள மரத்தில் கயிற்றால் தொங்கவிட்டுள்ளார்கள். இது அப்பகுதி மக்கிளின் நம்பிக்கையோடு தொடர்புடையதாக இருக்கின்றது.

**முடிவுரை**

இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் கிடைக்கும் நடுகற்கள் இந்திய மக்களின் அதாவது தமிழர்களின் வீரதீரச் செயல்களையும் மகளிர் மாண்பினையும், பாண்பாட்டியையும் அறிந்து கொள்ள உதவுகின்றன. சில நடுகற்கல் கேட்பாரற்றுக் கிடைக்கும் நடுகல் சிற்பற்களைப் பாதுகாத்து வரலாற்றுப் பாரம்பரியத்தைப் பேணி, அடுத்த தலைமுறைக்கு தருதல் என்பது நம் அனைவரின் பொறுப்பு மற்றும் கடமையாகும்.

**தகவலாளர் குறிப்பு**

1. மாணிக்கவேல், வயது. 25, கிருட்டிணகிரி மாவட்டம்.

2. அம்சாவதி, வயது. 36, ஏலகிரிமலை, இராயனேரி கிராமம்.

*Informant's details*

1. *Manikavel, age 25, Krishnagiri District.*
2. *Amsavathi, age 36, Yelagiri Hills, Rayaneri village.*

**Cite this Article in English**

**Manimegalai. S "The Tiger – Stabbed Stone – Based on field Research"** *MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES, ISSN: 3048-7854, Vol.3 Issue 1, January 2026, pp. 6-10*